RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2625

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# Ethical Perspectives on Wealth Acquisition in Tamil Moral Literature

**M. Venkatesan [a, *], D. Karthikeyan [a]**

[a] Department of Tamil, Government Arts and Science College, Ariyalur-621713, Tamil Nadu, India.

*Corresponding author Email: arrowvenkat@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2625

Received: 03-01-2026; Revised: 30-04-2026; Accepted: 06-05-2026; Published: 15-05-2026

**Abstract:** Wealth is essential for fulfilling the basic needs of human life and for enabling individuals to undertake virtuous actions. In the Tamil intellectual tradition, virtue (aram), wealth (porul), and pleasure (inbam) are recognized as the three fundamental objectives of human life. Among these, porul occupies an intermediary position, serving as a means that supports both virtuous living and the attainment of legitimate human well-being. However, Tamil ethical literature does not advocate the accumulation of wealth through unrestricted or morally questionable means. Instead, it emphasizes that wealth should be acquired through honest, righteous, and socially responsible means, without compromising virtue, compassion, and ethical conduct. This study examines the economic ideas articulated in selected Tamil ethical texts, focusing on Thirukkural, Naladiyar, Tirikatukam, Pazhamozhi Nanuru, and Nanmanikkadigai. Particular attention is given to the principles governing wealth acquisition, the relationship between wealth and virtue, and the ethical responsibilities associated with economic life. The study analyses how these texts distinguish legitimate wealth creation from wealth acquired through unjust or unethical practices and how economic prosperity is situated within a broader framework of moral and social well-being. It argues that Tamil ethical literature presents wealth not as an end in itself but as a means that should contribute to virtuous living, social responsibility, and human welfare. Thus, the economic perspectives found in these texts demonstrate the integration of economic conduct with ethical values, offering a distinctive dimension of economic thought within the Tamil intellectual tradition.

**Keywords:** Thirukkural, Wealth Acquisition, Naladiyar, Tirikatukam, Pazhamozhi Nanuru, Nanmanikkadigai.

# அற இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்

**ம. வெங்கடேசன் [அ, *], த. கார்த்திகேயன் [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, அரியலூர்-621713, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

மனித வாழ்வை முழுமையானதாகவும் பொருளுடையதாகவும் மாற்றக்கூடிய பல்வேறு நற்சிந்தனைகளை எடுத்துரைப்பவை அற இலக்கியங்களாகும். மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கொள்கைகளாக அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் தமிழற இலக்கியங்கள் முறையாக எடுத்துரைக்கின்றன. இம்மூன்றுள் பொருள் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பொருள் இருந்தால்தான் தனிமனிதனாலும் குடும்பத்தாலும் அறச்செயல்களை மேற்கொள்ளவும், வாழ்வின் இன்பங்களை நுகரவும் இயலும் என்ற நடைமுறை உணர்வு தமிழ்ச் சிந்தனையில் காணப்படுகிறது. தற்காலத்தில் பொருளியல் தனித்துறையாக வளர்ச்சியடைந்து, வளங்களைப் பயன்படுத்துதல், உற்பத்தி, நுகர்வு, வருமானம், சேமிப்பு, முதலீடு போன்ற பல்வேறு கூறுகளை ஆராய்கிறது. ஆனால் பழந்தமிழ் அற இலக்கியங்களில் பொருள் குறித்த சிந்தனை வெறும் பொருளாதாரச் செயல்பாடாக மட்டும் அமையவில்லை. பொருள் ஈட்டும் வழி அறத்தோடு பொருந்தியதாக இருக்க வேண்டும்; பிறருக்குத் தீங்கு விளைவிக்காத முறையில் செல்வம் சேர்க்கப்பட வேண்டும்; ஈட்டிய பொருள் தனக்காக மட்டும் பயன்படுத்தப்படாமல் பிறருக்கும் பயன்பட வேண்டும் என்ற சமூகநல நோக்கும் அவற்றில் இடம்பெறுகிறது. இவ்வாய்வு பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் குறிப்பாக வெளிப்படும் பொருள் குறித்த சிந்தனைகளையும், பொருளீட்டுவதற்கான அறநெறிகளையும் ஆராய்வதாக அமைகிறது.

## பொருளியல்

'பொருளியல்' என்ற கருத்து நவீன பொருளாதாரச் சிந்தனையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். 'Economics' என்ற ஆங்கிலச் சொல் கிரேக்க மொழியின் *Oikonomia* என்ற சொல்லிலிருந்து உருவானதாகக் கருதப்படுகிறது. *Oikonomia* என்பது முதலில் 'வீட்டு நிர்வாகம்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. குடும்ப வருமானம், செலவு, வளங்களின் பயன்பாடு ஆகியவை பொருளாதார வாழ்வின் அடிப்படை என்பதனால் இச்சொல் பின்னாளில் பரந்த பொருளைப் பெற்றது (Kathirver Pillai, 1992).

தமிழ்ச் சிந்தனை மரபில் 'பொருள்' என்பது வெறும் பணத்தைக் குறிக்கும் சொல்லாக மட்டுமின்றி செல்வம், உடைமை, ஆக்கம், வளம் போன்ற பல்வேறு பொருள்களைக் கொண்டதாக அமைகிறது. இதனால் பொருளியல் என்பது மனிதனின் பொருளாதார வாழ்வையும், அவன் பொருளைப் பெறும் மற்றும் பயன்படுத்தும் முறையையும் உள்ளடக்கிய பரந்த கருத்தாக்கமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

## தமிழிலக்கியங்களில் பொருளைக் குறிக்கும் பெயர்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் பொருளாதார வாழ்வைக் குறிக்கும் பல்வேறு சொற்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. நா. பாலுசாமி *பழந்தமிழ் இலக்கியத்தில் பொருளியற் கூறுகள்* என்னும் நூலில், பழந்தமிழ் இலக்கியங்களில் செல்வம் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட சொற்களாக பொருநர், உடைமை, ஆக்கம், செல்வம், பெருக்கம், திரு, கூழ், மாடு, கருவி, வெறுக்கை ஆகிய பத்துக் குறியீடுகளைச் சுட்டுகிறார் (Balusamy, 1999).

இதன் மூலம் பொருள் என்பது ஒரே ஒரு வடிவில் மட்டும் கருதப்படவில்லை என்பதை அறியலாம். செல்வம், உடைமை, உற்பத்தி, வளம், பொருளாதாரப் பெருக்கம் ஆகிய பல்வேறு நிலைகளில் பொருள் சிந்தனை தமிழிலக்கியங்களில் வெளிப்பட்டுள்ளது.

## அற இலக்கியங்களில் பொருள் பற்றிய சிந்தனைகள்

அற இலக்கியங்கள் பொருளின் தன்மை, பொருளின் அவசியம், பொருளீட்டும் முறை, பொருளைப் பயன்படுத்தும் முறை, பொருளின் பயன் ஆகிய பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கின்றன. இந்நூல்களின் தனிச்சிறப்பு பொருளை அறத்திலிருந்து பிரித்துப் பார்க்காததாகும்.

பொருள் ஈட்டுதல் வாழ்க்கையின் இன்றியமையாத செயலாக இருந்தாலும், பொருளைப் பெறுவதற்காக அறத்தைத் துறக்கக் கூடாது. பொருளீட்டும் வழிமுறையே அதன் மதிப்பைத் தீர்மானிக்கிறது. அறத்தோடு பொருந்திய வழியில் ஈட்டப்படும் பொருள் சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் பயனளிக்கும். அதற்கு மாறாக, பிறருக்கு இன்னல் விளைவித்து அல்லது ஒழுக்கத்திற்கு மாறாகப் பெறப்படும் செல்வம் அழிவை ஏற்படுத்தும். எனவே தமிழற இலக்கியங்களில் பொருளியல் என்பது 'அறநெறி சார்ந்த பொருளியல்' என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.

## அறம் - பொருள் - இன்பம் : பொருளின் இடம்

தமிழ்ச் சிந்தனை மரபில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவற்றுள் பொருள் நடுவணதாகக் கருதப்படுகிறது. பொருள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதோடு, அறச்செயல்களுக்கும் இன்ப வாழ்விற்கும் துணையாகிறது.

நாலடியார் இதனைத் தெளிவாக எடுத்துரைக்கிறது:

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்

நடுவண தெய்த இருதலையும் எய்தும்

நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்

தடுவது போலுந் துயர்."– *நாலடியார்*, பா.114.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுள் நடுவில் அமைந்த பொருளைப் பெறுபவன் அதன் இருபுறமும் அமைந்த அறத்தையும் இன்பத்தையும் அடைய முடியும் (Gowmareeswari, 2009). பொருளைப் பெறாதவன் வறுமையால் துன்புறுவான் என்ற கருத்து இப்பாடலில் வெளிப்படுகிறது. இதனால் பொருள் என்பது வெறும் செல்வச் சேர்க்கை அன்று அறத்தையும் இன்பத்தையும் செயல்படுத்துவதற்கான வாழ்க்கை வளமாகக் கருதப்படுகிறது.

## அறவழியில் பொருளீட்டுதல்

தமிழற இலக்கியங்களில் பொருளீட்டுதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முதன்மையான நெறி நேர்மையான வழியில் பொருளீட்டுதல் என்பதாகும். பொருளைப் பெறுவதற்காக அறத்தை மீறுதல், பிறருக்குத் தீங்கு செய்தல், வஞ்சித்தல், அநீதியான வழிகளில் செல்வம் சேர்த்தல் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திருவள்ளுவர் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள விடல்."– *திருக்குறள்*, 755.

அருளும் அன்பும் இல்லாத வழியில் பெறப்படும் பொருளை விரும்பக்கூடாது என்பதே இக்குறளின் அடிப்படைச் செய்தியாகும். இதன் மூலம் பொருளின் மதிப்பு அதன் அளவில் அன்று அது பெறப்பட்ட முறையில்தான் உள்ளது என்பதை அறியலாம் (Parimelalhagar, 1962). அறம் மற்றும் அன்பை மீறிப் பெறப்படும் பொருள் வெளிப்படையாகச் செல்வமாகத் தோன்றினாலும், அதன் அடிப்படையில் ஒழுக்கக்கேடு காணப்படும். எனவே அத்தகைய செல்வத்தைத் தமிழற இலக்கியங்கள் நிராகரிக்கின்றன.

## அறவழிப் பொருள் தரும் பயன்

அறநெறிக்கு உட்பட்டு ஈட்டப்படும் பொருள் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நன்மையைத் தரும். அது அறச்செயல்களுக்கு ஆதாரமாக அமையும்; இன்பமான வாழ்க்கைக்கும் துணைபுரியும்.

திருவள்ளுவர்,

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து

தீதின்றி வந்த பொருள்."– *திருக்குறள்*, 754.

என்று குறிப்பிடுகிறார் (Parimelalhagar, 1962).

இக்குறளில் பொருளின் மதிப்பு மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது. முதலில் பொருள் தீமையற்ற வழியில் வர வேண்டும். இரண்டாவது, அதனைப் பெறுவதற்கான திறமையும் முறையும் அறியப்பட வேண்டும். மூன்றாவது, அத்தகைய பொருள் அறத்தையும் இன்பத்தையும் வழங்கும். இதனால் நல்வழியில் பெறப்படும் பொருள் → அறச்செயல் → இன்பமான வாழ்க்கை என்ற வாழ்வியல் தொடர்பு உருவாகிறது.

## தீய வழியில் பொருளீட்டுவதன் விளைவுகள்

பொருளைப் பெறுவதற்காக அறத்தை மீறுதல் தமிழற இலக்கியங்களால் கடுமையாக மறுக்கப்படுகிறது. தீய வழியில் பெறப்படும் பொருள் தொடக்கத்தில் வளர்வது போன்று தோன்றினாலும், இறுதியில் அழிவைச் சந்திக்கும் என்பது இந்நூல்களின் பொதுவான கருத்தாகும்.

பழமொழி நானூறு,

"அல்லது செய்வார் அரும் பொருள் ஆக்கத்தை

நல்லது செய்வார் நயப்பவோ?... தீயன

ஆவதே போன்று கெடும்." – *பழமொழி நானூறு*, பா.173.

என்று கூறுகிறது (Gowmareeswari, 2009).

தீய செயல்களின் மூலம் உருவாகும் செல்வம் பெருகுவது போன்று தோன்றினாலும், அது நிலைத்திருக்காது; அழிந்துவிடும் என்பதே இப்பாடலின் கருத்தாகும். இதிலிருந்து பொருளாதார வளர்ச்சி என்பது செல்வத்தின் அளவால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதையும் அறநெறியோடு இணைந்த பொருளாதார வளர்ச்சியே நிலையானதாக அமையும் என்பதையும் அறியலாம்.

## வறுமையும் அறநெறியும்

பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றாலும், வறுமையைத் தவிர்ப்பதற்காக அறத்தை மீறக் கூடாது. பொருள் இல்லாத நிலை மனிதனை ஒழுக்கத்திலிருந்து விலகச் செய்யக்கூடாது என்பது தமிழற இலக்கியங்களின் முக்கியமான நெறியாகும்.

திருவள்ளுவர்,

“அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்

பிறன்போல நோக்கப் படும்.”– *திருக்குறள்*, 1047

என்று கூறுகிறார் (Parimelalhagar, 1962).

அறத்தோடு பொருந்தாத வறுமை ஒருவனைச் சேர்ந்தால், அவன் தன் உறவினர்களாலும் அயலானைப் போலக் கருதப்படுவான் என்ற கருத்து இக்குறளில் வெளிப்படுகிறது. இங்கு வறுமையின் சமூக விளைவுகளும் சுட்டப்படுகின்றன. இதன் அடிப்படையில் வறுமையை ஒழிப்பதற்கான பொருளாதார முயற்சிகளும் அறநெறியுடன் இணைந்ததாக இருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

## சூதாட்டப் பொருளைத் தவிர்த்தல்

பொருள் ஈட்டுவதற்கான எல்லா வழிகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உழைப்பு, நேர்மை, அறம் ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்படும் செல்வமே உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அதற்கு மாறாக சூதாட்டம் போன்ற முறைகளில் கிடைக்கும் பொருள் விரும்பத்தக்கதன்று.

திரிகடுகம்,

“கழகத்தால் வந்த பொருள் காமுறாமை

பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்,

உழவின்கண் காமுற்று வாழ்தல் - இம் மூன்றும்

அழகு என்ப வேளாண் குடிக்கு.” – *திரிகடுகம்*, பா.42.

என்று கூறுகிறது (Gowmareeswari, 2009).

சூதாட்டத்தின் மூலம் பெறப்படும் பொருளை விரும்பாமல் இருத்தல் சிறந்த பண்பாகக் காட்டப்படுகிறது. இதனுடன் உழவுத் தொழிலில் விருப்பத்துடன் வாழ்தலும் இணைத்துக் கூறப்படுகிறது. இதன் வழியாக உழைப்பு சார்ந்த பொருளீட்டலுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த மதிப்பை அறிய முடிகிறது.

## நடுவுநிலை தவறாத பொருளீட்டல்

பொருள் பெறும் முயற்சியில் நேர்மை, நடுவுநிலை, ஒழுக்கம் ஆகியவை கைவிடப்படக்கூடாது. மிகப்பெரிய செல்வம் கிடைக்கும் என்றாலும், உள்ளம் ஏற்றுக்கொள்ளாத செயலை மேற்கொள்ளக்கூடாது என்பதே அற இலக்கியங்களின் நிலைப்பாடாகும்.

நான்மணிக்கடிகை இதனை,

“அஞ்சாமை அஞ்சுக! ஒன்றின், தனக்குஒத்த

எஞ்சாமை, எஞ்சும் அளவுஎல்லாம்! நெஞ்சுஅறியக்

கோடாமை, கோடிப் பொருள்பெறினும்! நாடாமை

நட்டார்கண் விட்ட முனை!” – *நான்மணிக்கடிகை*, பா.25

என்று எடுத்துரைக்கிறது (Gowmareeswari, 2009).

இப்பாடலில் தீய செயல்களைக் கண்டு அஞ்சுதல், தன்னால் இயன்ற உதவியைச் செய்தல், கோடிக்கணக்கான பொருள் கிடைத்தாலும் நடுவுநிலையிலிருந்து விலகாமை போன்ற அறநெறிகள் வலியுறுத்தப்படுகின்றன. இதனால் பொருளீட்டலின் இறுதி இலக்கு செல்வச் சேர்க்கை மட்டுமல்ல; நேர்மையைப் பாதுகாத்தபடி செல்வத்தைப் பெறுதல் என்பதும் புலப்படுகிறது.

## உழைப்பும் பொருளீட்டலும்

தமிழற இலக்கியங்களின் பொருளியல் சிந்தனையில் உழைப்பிற்கு முக்கியமான இடம் வழங்கப்பட்டுள்ளது. உழைப்பின் மூலம் பெறப்படும் பொருள் நிலையானதாகவும் சமூகத்திற்கு பயனளிப்பதாகவும் கருதப்படுகிறது. குறிப்பாக வேளாண்மை சார்ந்த வாழ்வியல் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைந்திருந்த சூழலில், உழைப்பையும் அறத்தையும் இணைத்துப் பார்க்கும் சிந்தனை காணப்படுகிறது.

திரிகடுகம் சூதாட்டப் பொருளைத் தவிர்த்து உழவின்மீது விருப்பம் கொண்டு வாழ்வதைச் சிறந்த பண்பாகக் குறிப்பிடுவது இதற்குச் சான்றாக அமைகிறது. இதன் மூலம் உழைப்பின் அடிப்படையில் உருவாகும் பொருளாதார வாழ்விற்கு அற இலக்கியங்கள் வழங்கிய மதிப்பு வெளிப்படுகிறது.

## பொருளின் பயன்பாடும் அறச்சார்பும்

பொருளை ஈட்டுதல் மட்டுமே வாழ்க்கையின் நோக்கமாக இருக்கக்கூடாது. ஈட்டிய பொருளை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதும் முக்கியமானது. பொருள் அறச்செயல்களுக்கு பயன்பட வேண்டும்; பிறரின் தேவையை நிறைவு செய்யவும் சமூக நலனுக்குப் பயன்படவும் வேண்டும். இந்தக் கருத்து அற இலக்கியங்களின் பல்வேறு பகுதிகளிலும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் காணப்படுகிறது. ஈகை, விருந்தோம்பல், பகுத்துண்ணுதல், சுற்றத்தாரைப் பேணுதல் போன்ற அறங்கள் அனைத்திற்கும் பொருள் தேவைப்படுகிறது. எனவே பொருள் தனிமனிதனிடம் தேங்கி நிற்காமல் சமூகப் பயன்பாட்டிற்குச் செல்லும்போது அதன் அறச்சார்பு முழுமையடைகிறது.

## பொருளீட்டலில் சமூகப் பொறுப்பு

தமிழற இலக்கியங்களில் பொருளீட்டல் தனிமனிதச் செயலாக மட்டும் கருதப்படவில்லை. பொருள் சமூகத்துடனும் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. ஒருவர் ஈட்டும் பொருள் அவருடைய குடும்பத்திற்கும் சுற்றத்திற்கும் மட்டுமல்லாமல், சமூகத்தின் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

இக்கருத்து பொருளாதாரச் செயல்பாட்டில் சமூகப் பொறுப்பு என்ற நவீன கருத்தோடு ஒப்புமை பெறுகிறது. செல்வம் ஈட்டுபவன் தன் செல்வத்தை அறச்செயல்களுக்குப் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியும் சமூக நலனும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்ற தமிழ்ச் சிந்தனை வெளிப்படுகிறது.

## அற இலக்கியங்களின் பொருளியல் சிந்தனையின் தனித்தன்மை

அற இலக்கியங்களில் வெளிப்படும் பொருளியல் சிந்தனையைப் பின்வரும் அடிப்படைகளில் தொகுத்துக் காணலாம்:

முதலாவது, பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

இரண்டாவது, பொருளீட்டுதல் அறவழியில் அமைய வேண்டும்.

மூன்றாவது, அன்பும் அருளும் இல்லாத வழியில் பெறப்படும் செல்வம் விரும்பத்தக்கதன்று.

நான்காவது, தீய வழியில் சேர்க்கப்படும் செல்வம் நிலைத்திருக்காது.

ஐந்தாவது, சூதாட்டம் போன்ற அறமற்ற வழிகளில் பெறப்படும் பொருள் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆறாவது, உழைப்பின் மூலம் பொருளீட்டுதல் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

ஏழாவது, பொருள் அறத்திற்கும் இன்பத்திற்கும் துணைபுரிய வேண்டும்.

எட்டாவது, ஈட்டிய பொருள் தனிநலத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படாமல் பிறருக்கும் பயன்பட வேண்டும். இவ்வகையில் தமிழ் அறஇலக்கியங்களின் பொருளியல் சிந்தனை பொருளாதாரத்தையும் அறத்தையும் ஒருங்கிணைத்த வாழ்வியல் கோட்பாடாக அமைகிறது.

## முடிவுரை

தமிழற இலக்கியங்களில் பொருள் என்பது வெறும் செல்வச் சேர்க்கைக்கான கருவியாகப் பார்க்கப்படவில்லை. அது மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும், அறச்செயல்களை மேற்கொள்வதற்கும், இன்பமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் துணைபுரியும் வாழ்வியல் வளமாகக் கருதப்படுகிறது. இதனால் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பு தமிழ்ச் சிந்தனையில் முக்கியமானதாகிறது. பொருள் ஈட்டுவதில் வழிமுறை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பிறரைத் துன்புறுத்தி, வஞ்சித்து, அநீதியான வழிகளில் பெறப்படும் செல்வம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அது அறநெறிக்கு உட்பட்டதாகாது. அன்பும் அருளும் சார்ந்த அறவழியில் பெறப்படும் பொருளே நிலையானதாகவும் பயனுடையதாகவும் அமையும் என்பதைத் திருக்குறள், நாலடியார், திரிகடுகம், பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை போன்ற

அறநூல்கள் வலியுறுத்துகின்றன. மேலும், பொருளின் நோக்கம் தனிமனிதச் செல்வச் சேர்க்கையில் முடிவடையாமல் சமூகப் பயன்பாட்டை நோக்கியதாக அமைய வேண்டும். பொருள் ஈட்டும் முறை அறத்தோடு இணைந்திருக்க வேண்டும் பொருள் பயன்படுத்தப்படும் முறை பிறருக்கும் பயன் தருவதாக இருக்க வேண்டும். இவ்விரு நிலைகளும் இணைந்தால்தான் பொருளாதார வாழ்வு அறச்சார்ந்ததாகிறது. எனவே, தமிழற இலக்கியங்கள் முன்வைக்கும் பொருளியல் சிந்தனையை "அறத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளீட்டல் - சமூகநலத்தை நோக்கிய பொருள் பயன்பாடு - தனிமனித மற்றும் சமூக இன்பம்" என்ற முப்பரிமாண வாழ்வியல் கோட்பாடாகக் கருதலாம். பொருளாதார வளர்ச்சி அறநெறியிலிருந்து விலகாமல் அமைய வேண்டும் என்ற இச்சிந்தனை இன்றைய சமூகத்திற்கும் பொருத்தமானதாக விளங்குகிறது.

## References


Balusamy, N. (1999) Palantamil Ilakiyathil Poruliyar Koorukal, Madurai Kamarajar University, Madurai.

Gowmareeswari, S. (2009) Pathinenkeezhkanakku Noolgal Moolamum Uraiyum, Saratha Pathipagam, Chennai

Kathirver Pillai, N. (1992) Tamil Moliyagarathi, Asiya Kalvi Sevai, Chennai, India

Parimelalhagar (1962) Thirukural, Uma Pathipagam, Chennai, India


## Conflict of interest

The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

M. Venkatesan, D. Karthikeyan, Ethical Perspectives on Wealth Acquisition in Tamil Moral Literature, Indian Journal of Tamil, 7(2), (2026) 34-39. https://doi.org/10.54392/ijot2625